# மெடிசேவ் கணக்கில் நிரப்புத்தொகை செலுத்தும் வழிகாட்டி

- PayNow மூலம் நீங்கள் ரொக்க நிரப்புத்தொகைகளைச் செலுத்தும் போது, பொதுவாக உடனடியாக உங்கள் கணக்கில் வரவு சேர்க்கப்படும்.
- உங்கள் பரிவர்த்தனையின் நிலையை இணையத்தில் சரிபார்க்கலாம்.

QR குறியீட்டை ஸ்கேன் செய்தோ அல்லது cpf.gov.sg இணையத் தளத்திற்கு சென்றோ ரொக்க நிரப்புத்தொகைகளைச் செலுத்தலாம்.

cpf.gov.sg/topupmedisave

i) வழிமுறைகளைப் பின்பற்றி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யவும்
ii) உங்கள் விண்ணப்பத்தை மறுபரிசீலனை செய்து “submit” என்பதை கிளிக் செய்யவும். அதன்பின், உங்கள் கட்டணத்தை செலுத்த ஒரு PayNow QR குறியீடு உருவாக்கப்படும்.
iii) உங்கள் வங்கியின் கைத்தொலைபேசி செயலியில் உள்நுழைந்து, உருவாக்கப்பட்ட QR குறியீட்டை ஸ்கேன் செய்து, கட்டணத்திற்கு அங்கீகரிக்கவும்.
iv) PayNow QR மூலம் பணம் செலுத்துவதற்கான வழிகாட்டுதல்களைப் பெற, பக்கம் 2 முதல் 4 வரை உள்ள தகவல் விதிமுறைகளைப் பின்பற்றலாம்.

<u>மற்ற பயனுள்ள இணைப்புகள்:</u>

- மின்-பணமளிப்புகள் மற்றும் மின்னிலக்க வங்கித்துறை பற்றி மேலும் அறிய தகவல் தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையத்தின் (IMDA) வலைதளத்தைப் பார்வையிடுங்கள்.

- நீங்கள் மின்னிலக்க தூதரின் நேருக்கு நேர் வழிகாட்டுதலைப் பெற வேண்டுமானால் அருகிலுள்ள SG Digital community hub செல்லவும்.

**<u>PayNow QR மூலம் எப்படி பணம் செலுத்துவது?</u>**

“மெடிசேவ் நிரப்புதொகை” படிவத்தை பூர்த்தி செய்த பிறகு, ஒரு PayNow QR குறியீடு உருவாக்கப்படும்.

**படி நிலை 1: QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**

தொடர்வதற்கு நீங்கள் இரண்டு விருப்பங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்:

**<u>விருப்பம் A: உங்கள் கைத்தொலைபேசியில் நேரடியாக ஸ்கேன் செய்வது</u>**

- உங்கள் வங்கியின் கைத்தொலைபேசி செயலியை திறக்கவும்.
- முகப்புப் பக்கத்தில் உள்ள “Scan & Pay” சின்னத்தைத் தேர்ந்தெடுக்கவும்.
- பரிவர்த்தனைக்காக உருவாக்கப்பட்ட PayNow QR குறியீட்டை வருடவும்.

**<u>விருப்பம் B: QR குறியீட்டை சேமித்து பின்னர் பதிவேற்றுவது</u>**

நீங்கள் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கவும், கட்டணம் செலுத்தவும் ஒரே சாதனத்தைப் பயன்படுத்தினால்

- “Save QR code” என்பதைக் கிளிக் செய்யவும்.
- உங்கள் வங்கியின் கைத்தொலைபேசி செயலியைத் திறக்கவும்.
- செயலியின் முகப்புப் பக்கத்தில் உள்ள “Scan & Pay” சின்னத்தைத் தேர்ந்தெடுக்கவும்
- உங்கள் புகைப்படத் தொகுப்பில் சேமித்துள்ள QR குறியீட்டைத் தேர்ந்தெடுத்து பதிவேற்றவும்.




→ விருப்பம் A: உங்கள் கைத்தொலைபேசியில் நேரடியாக ஸ்கேன் செய்வது

→ விருப்பம் B: QR குறியீட்டை சேமித்து பின்னர் பதிவேற்றுவது

*PayNow குறியீடு அதே நாளின் இரவு 11:59 மணிக்கு காலாவதியாகும் என்பதை நினைவில் கொள்ளவும்*

காண்பிக்கப்பட்ட படங்கள் / காட்சிகள் குறிப்புக்காக மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.
இறுதியாக புதுப்பிக்கப்பட்ட தேதி: செப்டம்பர் 2025.

**படி நிலை 2: செலுத்தும் பணத்தை பற்றிய விவரங்களை சரிபார்க்கவும்**

PayNow குறியீட்டை ஸ்கேன் செய்ததும், உங்கள் வங்கியின் கைத்தொலைபேசி செயலியில் கீழ்க்கண்ட விவரங்கள் காணப்படும்:

i) பெறுநர் பெயர்:
இது நீங்கள் கட்டணம் செலுத்தும் நிறுவனத்தை குறிப்பிடும். உதாரணமாக: "மசேநிதியில் தன்னிச்சையான சந்தாக்கள்" என்று காட்டப்படும்.

ii) செலுத்த வேண்டிய தொகை:
நீங்கள் படிவத்தில் குறிப்பிட்ட தொகையுடன் இது ஒத்திருப்பதை உறுதி செய்யவும்.

iii) பரிவர்த்தனை குறிப்பு எண்:
இது உங்கள் விண்ணப்பத்திற்காக தனித்துவமாக உருவாக்கப்பட்ட குறிப்பு எண் ஆகும்.




→ படிவத்தில் குறிப்பிட்ட தொகை. தயவுசெய்து இதை மாற்ற வேண்டாம்

→ பெறுநர் பெயர்

→ பரிவர்த்தனை குறிப்பு எண். தயவு செய்து இதை மாற்ற வேண்டாம்

<u>முக்கியம்</u>:
ஏதேனும் தகவல் தவறானதாக இருந்தால், தயவுசெய்து கட்டணத்தை ரத்து செய்து, மீண்டும் நிரப்புத்தொகையை நிரப்பவும். அதே நாளில் கட்டணம் பெறப்படாவிட்டால் சமர்ப்பிப்பு ரத்து செய்யப்படும்.

காண்பிக்கப்பட்ட படங்கள் / காட்சிகள் குறிப்புக்காக மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.
இறுதியாக புதுப்பிக்கப்பட்ட தேதி: செப்டம்பர் 2025.

**படி நிலை 3: பணம் செலுத்துதலை அங்கீகரிக்கவும்**

உங்கள் வங்கியின் கைத்தொலைபேசி செயலி  கட்டணத்தை உறுதிப்படுத்துமாறு கேட்கலாம்.
அப்போது, திரையில் வரும் வழிமுறைகளைப் பின்பற்றி அங்கீகாரத்தை செலுத்தவும்.

கட்டணம் செலுத்துதல் வெற்றிகரமாக முடிந்தவுடன், உங்கள் வங்கி செயலியிலிருந்து வெளியேறலாம்.




**படி நிலை 4: கட்டணம் உறுதிப்படுத்துதல்**

கட்டணம் வெற்றிகரமாக நிறைவேறியதும், எங்கள் தரவுகளில் இருக்கும் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு உறுதிப்படுத்தல் மின்னஞ்சல் அனுப்பப்படும்.

மேலும், நீங்கள் cpf.gov.sg இணையதளத்தில், "Activities" அல்லது பரிவர்த்தனை வரலாறு பகுதியில் உங்கள்  நிரப்புத்தொகை விவரங்களைச் சரிபார்க்கலாம்.

*உதவி தேவையா?*
*நீங்கள் PayNow QR குறியீட்டை ஸ்கேன் செய்வதில் சிரமம் ஏற்படுமானால் தயவுசெய்து உங்கள் வங்கியைத் தொடர்புகொள்ளவும்.*

காண்பிக்கப்பட்ட படங்கள் / காட்சிகள் குறிப்புக்காக மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.
இறுதியாக புதுப்பிக்கப்பட்ட தேதி: செப்டம்பர் 2025.